www.ecourtsindia.com

## முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஈரோடு

## அசல் வழக்கு எண்.84/2023

2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம், 1969 ம் ஆண்டுச் சட்டம் பிரிவு 19 ன்படி திரு.G. அருண்குமார், B.Sc.,B.L., முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரளா | ஜாதி | : | |
| த/பெ, க/பெ | : | | சமயம் | : | |
| வயது | : | | கிராமம் | : | |
| தொழில் | : | | வட்டம் | : | |

**வா.சா.1 : (சரளா) சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை :**

எனது தரப்பு சாட்சியத்திற்காக நிரூபண ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்கிறேன். அதனை எனது தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

09.12.1999 தேதியிட்ட எனது தாயார் பெயரிலுள்ள கிரைய ஆவணத்தின் சார்பதிவக ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.1.** 03.11.2000 தேதியிட்டு அசல் தானசெட்டில்மெண்ட் ஆவணம் என் வசம் உள்ளது. வங்கி பயன்பாட்டிற்கு அது தேவைப்படுவதால் சார்பதிவக ஆன்லைன் சான்று நகல் **வா.சா.ஆ.2.** எனது பெயரிலுள்ள சொத்து வரி ரசீதுகள்-2 **வா.சா.ஆ.3.** என் பெயரிலுள்ள குடிநீர் கட்டண ரசீதுகள்-2 **வா.சா.ஆ.4.** மின் கட்டண ரசீதுகள்-2 **வா.சா.ஆ.5.** 06.04.2005 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தின் சார்பதிவக ஆன்லைன் சான்று நகல் **வா.சா.ஆ.6.** 11.04.2001 தேதியிட்டு வட்டாட்சியர் எனக்கு வழங்கிய விதவை சான்று



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED030001522023/truecopy/order-1.pdf

ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.**7. எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.**8. எனது தாயாரின் வாரிசு சான்றிதழ் ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.**9. எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.**10. தாவா சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ.**11. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில் :**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED030001522023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com